கொள்ளுகின்றேன். மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் எழுப்பியதைக் குறித்து, அவை முன்னவரையும் கலந்து 12 மணி அளவில் தெரிவிக்கின்றேன்.

2. ஒத்திவைப்புத் தீர்மானம்.

மதுரை எர்ஸ்கின் மருத்துவமனையில் அடிக்கடி மின்விளக்குகள் அணைதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு அனுமதி கோரி மாண்புமிகு உறுப்பினர் திரு. கரு. சீமைச்சாமி அவர்கள் கடிதம் எழுதியுள்ளார்கள். அனுமதி கோருகின்ற அந்தக் கடிதத்தை அவர்கள் இப்பொழுது படிப்பார்கள்.

*** திரு. கரு. சீமைச்சாமி :** தலைவர் அவர்களே, தமிழகச் சட்டப் பேரவை விதிகளின் 42-வது விதியின் கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த கீழ்க்கண்ட பொருள்பற்றி விவாதிக்க சபையின் நடவடிக்கைகளை ஒத்திவைக்க வேண்டுமென்று ஒரு தீர்மானத்தை நான் கொடுத்திருக்கிறேன் :

"மதுரை எர்ஸ்கின் அரசாங்க பெரிய மருத்துவ மனையில் அடிக்கடி மின் விளக்குகள் அணைந்து விடுவதால், மருத்துவர்கள் செய்து கொண்டிருக்கும் ஆபத்தான அறுவை சிகிச்சைகளைத் திடீர் என நிறுத்தி மீண்டும் டார்ச் விளக்குகள் உதவியுடன் சிகிச்சையைச் செய்ய வேண்டியிருக்கின்ற நிலைமை பற்றி விவாதிக்க"

இந்த அவையின் நடவடிக்கைகளை ஒத்திவைத்து மேற்கண்ட பொருளைப்பற்றி விவாதிக்க அனுமதிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர் அவர்கள், மின்சார விளக்குகள் அணைவதைக் குறித்து, இந்த வரவு-செலவுத் திட்டப் பொது விவாதத்தின்போதும், மருத்துவத் துறைநிதிக் கோரிக்கையின் மீது 6—7—1967 அன்றும், நிதி ஒதுக்கீடு மசோதாமீது 15—7—1967 மன்றும் பேசுவதற்கு வாய்ப்பு இருக்கிற காரணத்தால், இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு அனுமதி மறுக்கப்படுகிறது என்று நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

3. கவன ஈர்ப்பு—நூல் விலை ஏற்றமும் கைத்தறித் தொழில் நிலையும்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, திரு. எல். ஆறுமுகம் அவர்கள், சட்டப் பேரவையின் 41-வது விதியின் கீழ் உடனடி பொது முக்கியம் வாய்ந்த காரியம் ஒன்றை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருவார்கள்.

1967 ஜூன் 24]

* **திரு எஸ். ஆறுமுகம் :** தலைவர் அவர்களே, சட்டப் பேரவையின் 41-வது விதியின்கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த இந்த விஷயத்தைக் குறித்த அறிவிப்பை நான் இரண்டு மூன்று மாதங்களுக்கு முன்பே கொடுத்திருக்கிறேன். அதற்கும் இப்பொழுது நான் சொல்வதற்கும் மாறுபாடு இருக்கிறது என்பதை முதலில் தெரிவித்துக்கொண்டு இப்பொழுது என் பெயரிலுள்ள அறிக்கையை நான் படிக்கின்றேன். அதாவது—

''தமிழகத்தில் வெவ்வேறு ரக நூல்களின் விலை 10 ராத்தல் கொண்ட ஒரு கட்டுக்கு ரூ. 10-லிருந்து ரூ. 12 வரை அதிகம் கொடுத்துப் பெற வேண்டியிருப்பதால் கைத்தறித் துணி உற்பத்தியாளர்களும் தொழிலாளர்களும் குறிப்பாக சேலம் மாவட்டத்தில் பெரிதும் பாதிக்கப்பட்டிருப்பதால் அவர்களுடைய தொழில் தங்குதடையின்றி நடக்க தக்க நடவடிக்கை எடுக்க வேண்டியது'' பற்றிய அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த விஷயத்தை மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு நான் கொண்டுவருகின்றேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, கடந்த மூன்று மாதங்களாகப் பருத்தி நூல் விலைகள் உயர்ந்து கொண்டே போகின்றன. கச்சா பருத்தியின் விலை உயர்ந்திருப்பதும் உற்பத்திச் செலவுகள் அதிகரித்திருப்பதும் பருத்தி விலை உயர்வுக்குக் காரணமாகச் சொல்லலாம். பருத்தி நூல் விலையில் கச்சாப் பருத்தியின் விலை சுமார் மூன்றில் இரு பங்காகிறது. எஞ்சிய பகுதியில் கணிசமான அளவு தொழிலாளர்களுக்கான கூலியைக் குறிக்கிறது. கச்சாப் பருத்தியின் விலைகளும் தொழிலாளர்களின் கூலியும் மிக அதிகமாய் உயர்ந்துள்ளன. மேலும், பருத்தி நூலின்மீது விதிக்கப்படும் ஆயத் தீர்வை வீதங்களும் அதிகரித்துள்ளன. பருத்தி நூல் விலை ஏற்றத்திற்கு இதுவும் காரணமாகும்.

நூல் விலையைக் குறைப்பதற்கான வழி வகைகள் குறித்து ஆலோசனை கூறுவதற்காகத் தனிப்பட்ட குழு ஒன்றை 1966 செப்டம்பர் திங்களில் நெசவாலைக் கமிஷனர் நிறுவினர். நெசவாலை இணைக் கமிஷனரைத் தலைவராகக் கொண்ட இக் குழுவில் மாநிலக் கைத்தறித் துறை நெறியாளர்களும் இந்தியப் பருத்தி ஆலைகள் கழகம் தென்னிந்திய ஆலை உரிமையாளர் மன்றம் பிற ஆலைகள் சங்கங்கள் ஆகியோரின் பிரதிநிதிகளும் கைத்தறி நெசவாளர்கள், விசைத்தறி நெசவாளர்கள், நூல் வர்த்தகர்கள் ஆகியோரது பிரதிநிதிகளும், அக் குழுவின் உறுப்பினர்களாவர், தற்போது நிலவி வரும் நிலைமை காரணமாக இக் குழு தொடர்ந்து செயல்படும் என்று தோன்றுகிறது.

கைத்தறி நெசவுக்குப் பருத்தி நூல் இன்றியமையாத மூலப் பொருளாகும். எனவே, பருத்தி விலை உயர்வினால் கைத்தறி நெசவாளர்கள் இயல்பாகவே பாதிக்கப்பட்டுள்ளனர், நூலின் விலை உயர்வு பற்றி ஏராளமான புகார்கள் வந்துள்ளன. ஆனால், கைத்தறிச் சரக்குகள் தேங்கியுள்ளது குறித்தும் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களாக உள்ள நெசவாளர்கள் அல்லது கூட்டுற

வுச் சங்க உறுப்பினரல்லாத நெசவாளர்கள் வேலையின்றி தவிக்கின்றனர் என்றும் புகார் எதுவும் வரவில்லை. விலை ஏற்றத்தினால் நெசவாளர்களிடையே பீதி ஏற்பட்டபோதிலும், அதனால் நெசவாளர்கள் பெரிய அளவில் வேலையில்லாது தவிப்பதாகத் தெரியவில்லை. ஆயினும், நூல் விலை தொடர்ந்து அதிகரித்துக் கொண்டே போனால், கைத்தறித் துணிகள் விற்பனையாகாது தேக்கமடையலாம். அதன் காரணமாக நெசவாளர்களிடையே வேலையில்லாத் தவிப்பு ஏற்படலாம். நிலைமையை அரசு விழிப்புடன் கவனித்து வருகிறது. நூலின் விலை ஏற்றத்தைத் தடுக்க தேவைப்படும் எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த அலுவல் வரவு-செலவுத் திட்டத்தின் மீதான பொது விவாதம் தொடர்ந்து நடைபெறும். இன்று ஐந்தாம் நாளாக இந்த விவாதம் நடைபெறுகிறது.

4. ஒழுங்குப் பிரச்சினைகள்.

(அ) அறிமுகம் செய்யப்படும் மசோதாக்களின் நகலை முன்னதாக உறுப்பினர்களுக்கு வழங்குதல்.

* **திரு. சோ. அழகிரிசாமி :** ஐயா, நான் ஒரு ஒழுங்குப் பிரச்சினை எழுப்ப விரும்புகிறேன். ஒரு மசோதாவைச் சபையில் அறிமுகம் செய்யும்போது, ஒரு நாள் முன்னதாக அந்த மசோதாவின் நகல் உறுப்பினர்களுடைய கைக்குக் கிடைக்கவேண்டும். மக்கள் சபையில் இந்த முறை அனுஷ்டிக்கப்படுகிறது. நேற்று தாக்கல் செய்யப்பட்ட மசோதா இரவுதான் எங்கள் கைக்குக் கிடைத்தது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. அழகிரிசாமி அவர்கள் சொல்லப்போகிற நடைமுறைக் கேள்வி என்ன என்பது எனக்குத் தெரிகிறது. மசோதாக்கள் இன்று மாலை எடுத்துக் கொள்ளப்படும். இப்பொழுது, வரவு செலவுத் திட்டத்தின்மீது பொது விவாதம் தொடர்ந்து நடைபெறும். உறுப்பினர் அவர்கள் தம்முடைய கேள்வியை மாலை 3-30 மணிக்கு எழுப்பலாம்.

மசோதாவொன்றை அறிமுகப்படுத்திய பிறகு, ஐந்து நாட்களுக்குப் பிறகுதான் அதை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ள வேண்டும், இரண்டு நாட்களுக்கு முன்னதாகவாவது உறுப்பினர்களுக்கு அதனுடைய சுவடி கிடைத்தாகவேண்டும் என்று உறுப்பினர் அவர்கள் தம்முடைய நடைமுறைக் கேள்வியில் குறிப்பிட விரும்புகிறார் என்று நான் கருதுகின்றேன். அது தானே ?

திரு. சோ. அழகிரிசாமி : அதுதான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்று மாலை 3-30 மணிக்கு மசோதாக்கள் எடுத்துக்கொள்ளப்படும். இப்பொழுது வரவு-செலவுத் திட்டத்தின் மீது ஐந்தாம் நாளாகப் பொது விவாதம் தொடர்ந்து நடைபெறும். முதலில் மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. பொ. சிவஞானம் அவர்கள் பேசுவார்கள்.